# <u>In the Court of the  District Munsif, Eraniel</u>

**Original Suit No. 19/2016** **Date:11.02.2026.**

**(PW1)- அருள்**

<u>ஆம் பிரதிவாதி தரப்பு  குறுக்கு  விசாரணை  தொடர்ச்சி</u>

1. இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்க்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் ஈஸ்வரபாக்கியம் உரிமைப்பட்டதாகும். ஈஸ்வர பாக்கியம்த்தின் மகன் தான் வாதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈஸ்வரபாக்கியத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் யாரிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் சிவகுமார் என்பவர் இடம் இருந்து கிரயம் பெற்றேன். சிவகுமார் யாரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் தீபா என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றார். மேற்படி தீபா என்பவர் ஈஸ்வரபாக்கியத்திடம்  இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான்.

2. ஈஸ்வர பாக்கியத்திற்கு தாவா சொத்தில் 1/5 பங்கு தான் உரிமை உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈஸ்வரபாக்கியத்திற்கு தாவா சொத்து குடும்ப பாகப்படி கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதியின் குடும்ப சொத்து என்பதால் அதில் வாதிக்கு 1/5 பங்கு பாத்தியம் உண்டு என்றால் வாதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தான் தீபா என்பவருக்கு சொத்தை எழுதி கொடுத்து உள்ளார்கள். அனைவரும் சேர்ந்து கையெழுத்து செய்தர்களா என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சாட்சி தன்னிச்சயாக கூறுகிறார். தீபா கிரயம் பெற்ற ஆவணம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3. நான் ஈஸ்வரபாக்கியத்தின் குடும்ப உறுப்பினர் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்தை இந்த வழக்கு தாக்கல் செய்யத பின்பு தான் நானும் எனக்கு கிரயம் கொடுத்த நபரும் கிரயம் பெற்றோம் என்றால் அது பற்றி தெரியாது. எனது மனைவிக்கு மேற்படி விபரங்கள் தெரியுமா என்றால் என் மனைவிக்கு தெரியாது. சொத்தை வாங்கும் சமயத்தில் நான் வில்லங்கம் பார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்து எந்த வில்லங்கமும் இல்லை என்று உறுதி செய்யத பின்பு வாங்கினேன். இந்த வழக்கு குறித்து எப்போது தெரியா வந்தது என்றால் இந்த வழக்கில் நீதமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்த பின்பு தெரிந்து கொண்டேன்.

4. இந்த வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து தீபா என்பரிடமோ எனக்கு கிரயம் கொடுத்த நபரிடமோ நான் விசாரித்தேனா என்றால் கேட்டேன் ஆனால் அவர்கள் வழக்கு பற்றி தெரியாது என்று

கூறியுள்ளனர். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் DTH அமைத்து தரும் தொழில் செய்கிறேன். எனக்கு தினகூலி எவ்வாளவு என்றால் தினசரி சம்பளம் கிடையாது வேலையை பொறுத்து ஊதியம் கிடைக்கும். சரசரியாக ஒரு வேலை பார்த்தால் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் 500 முதல் 1000 வரை கிடைக்கும்.

5. நான் பட்டிகை சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றேன் என்றால் 24,00,000 லட்சத்திற்கு கிரயம் பெற்றேன். மேற்படி தொகை என்னிடம் இருப்பதை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் எனது மனைவின் நகையை அடகு வைத்தும் மேலும் கடன் பெற்றும் கிரயம் பெற்றேன். மேற்படி அடகு வைத்தற்க்கான ஆவணமும் கடன் பெற்றாதற்கான ஆவணமும் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். கையில் இருக்கும் ஆவணங்கள் எவ்வளவு கடன் தொகைக்கானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்து குடும்ப சொத்துகளில் யாருக்கெல்லாம் உரிமை உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. நான் எனது எதிர் உரையில் இந்து குடும்ப சொத்தில் பெண் மகளுக்கு உரிமை இல்லை என்று நான் தெரியாமல் தான் குறிப்பிட்டேன் என்றால் தெரியாமல் தான் குறிப்பிட்டேன். வாதி 1 ம் பிரதிவாயான தீபா என்பவருக்கு கிரயம் கொடுக்கததால் அவருக்கு வழக்கு சொத்தில் உரிமை உண்டு என்றால் சரியல்ல. மொத்த சொத்துக்களில் ஈஸ்வரபாக்கியத்திற்கான 1/5 பங்கு சொத்து அவரது 4 மக்களுக்கு1/5 பங்கு வரும் என்றால் சரியல்ல, அனைவரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளர். அதன் அடிப்படையில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

7. நான் 1ம் பிரதிவாதிக்காக வேண்டி போலியான ஆவணங்களை ஏற்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரய தொகையாக ரூ. 24 லட்சம் கொடுத்ததாக வழக்கிற்ககாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரு உள்ள பரிகாரங்கள் வாதியின் செலவு தொகையுடம் வாதிக்கு கிடைக்க பெறும் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.